முருகப்பெருமான் துணை

**மகான் வால்மீகி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.06.2022, வியாழக்கிழமை

1. தவமாக தன் பலம்தன்னை
தரணியை காக்க வேண்டி
அவதாரம் எடுத்து தருமமாக்கி
அன்னசேவை ஆற்றும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது மிதுனதிங்கள்
வரங்களென ஈரான திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 02 நாள், 16.06.2022 வியாழக்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே வால்மீகி யானும்
தரணியோர் நலம்பெற உரைப்பேன்
அண்ணலாய் வந்த அரங்கஞானி
அற்புதம் உலகோர் அறிந்துவர
4. வருகவே குருவருள் எனும்
வல்லமையான சக்தி கொண்டே
திருவருளை மக்கள் அடைந்து
தெய்வநெறிபட வாழநேரும்
5. நேருமை கொண்ட நல் ஞானி
நீதி நெறி தொடருபவர்க்கு
வறுமை போராட்டம் விலகும்
வசதி வளம் வந்து சேரும்
6. சேருமே நன்னடத்தை பலம்
சேர்மானம் வகைதனிலும் கூட
பெருமை ஆதரவு கூடியே
புகழும் நல்மதிப்பும் பெருகும்
7. பெருகவே ஞானவான்களின்
பெருந்தயவு தொடர்பு கூடி
ஆறுமுகக் கடவுளை வணங்கும்
அறிவும் தெளிவும் கிடைத்துமே
8. கிடைத்துமே கலிகால வாழ்வின்
குறைகள் இடர்களை வென்று
தடையற சகல வகையிலும்
தனித்துவம் பெற்று உயர்வர்
9. உயர்வைதரும் ஞானிகளின்
உன்னதமான அருளும் ஆசியும்
தயவாக கிட்டும் தீட்சை பலமும்
தரணியோரை ஞானியாகவே மாற்றும்

10. மாற்றம் தரும் மகா சக்தியான
மரணம்வெல்லும் தவசியான அரங்கன்
ஆற்றல்அறிந்து சரணடைய
அனைவருக்கும் அழியாமை எனும்

11. எனும் ஞானபலம் கூடியே
எங்கும் எதிலும் குருவருள்
ஞானமாகி ஞான ஆட்சிகாலமாகும்
நாட்டிய அருளாசி முற்றே

—சுபம்—